பக்கங்கள் 20+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | சித்திரை 06 சனிக்கிழமை 19.04.2025 | அதிர்வு 259

## முக்கிய பிரச்சினைகளை மூடி மறைக்கின்றார் அநுர

### சாணக்கியன் குற்றச்சாட்டு



எமது நாட்டின் முக்கிய பிரச்சினைகளை மூடி மறைப்பதில் ஜனாதிபதி அநுரகுமார 02▶

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



### தமிழர் தாயகத்தில் உணர்வெழுச்சியுடன்

# தியாகி அன்னை பூபதியின் 37ஆம் ஆண்டு நினைவேந்தல்

இந்தியப் படைகளின் ஆக்கிரமிப்புக்கு எதிராக 31 நாட்கள் உண்ணாநோன்பிருந்து தாயக விடுதலைக்காக உயிர் நீத்த நாட்டுப்பற்றாளர் தியாகி அன்னை பூபதியின் 37 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் வடக்கு, கிழக்கில் இன்று உணர்வெழுச்சியுடன் நடைபெற்றன.

அந்தவகையில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திலும் அன்னை பூபதியின் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழகத்தின் பிரதான வளாகத்தில் 02▶









## தண்டவாளத்தில் உறங்கிய

# ரயில் கடவை மேற்பார்வையாளர் ரயில் மோதி பரிதாப உயிரிழப்பு!

ரயில் கடவை மேற்பார்வையாளர் ஒருவர் ரயில் மோதி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பெரகும்புர – அம்பேவளை ரயில் நிலையங்களுக்கு இடையில் உள்ள ரயில் கடவையில் இன்று சனிக்கிழமை அதிகாலை 4.15 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பட்டிபொல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பதுளை, தியத்தலாவை பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார்.

இவர் கொழும்பில் இருந்து பதுளை நோக்கிப் பயணித்த ரயில் மோதியே உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் குறித்த ரயில் கடவையின் மேற்பார்வையாளராகப் பணிபுரிந்து வந்துள்ள நிலையில் சம்பவதினத்தன்று ரயில் தண்டவாளத்தில் உறங்கிக்கொண்டிருந்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் அதே ரயிலில் ஏற்றப்பட்டு அம்பெவெல ரயில் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பட்டிபொல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# யாழ். நகரில் கஞ்சாவுடன் இரு இளைஞர்கள் கைது!

யாழ்ப்பாணத்தில் கஞ்சா போதைப் பொருளுடன் இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில், நேற்று வெள்ளிக்கிழமை மாலை தட்டாதெரு பகுதியில் இரண்டு இளைஞர்களைக் கைது செய்து சோதனையிட்டபோது அவர்களின் உடைமையில் இருந்து 52 கிராம் கஞ்சா போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட இரண்டு இளைஞர்களும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தியாகி அன்னை...

இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது அகவணக்கம் செலுத்தப்பட்டு, அன்னை பூபதியின் திருவுருப்படத்துக்குச் சுடரேற்றி மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கலந்துகொண்டு அஞ்சலிகளைச் செலுத்தினர்.

1988 ஆம் ஆண்டு இந்தியப் படையினருக்கு எதிராகக் குரல் கொடுக்க, அறப் போராட்டங்களை நடத்த மட்டக்களப்பு – அம்பாறை மாவட்ட அன்னையர் முன்னணி முடிவு செய்தது.

“உடனடியாகப் போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்”, “தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தித் தீர்வு காண வேண்டும்” ஆகிய இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தில் குருந்தை மரநிழலில் 1988 மார்ச் 19ஆம் திகதி அன்னை பூபதி சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

அன்னை பூபதி நீர் மட்டும் அருந்தி சாகும் வரை உண்ணா நோன்பு இருந்தார். இடையில் பல தடங்கல்கள் வந்தன.

உண்ணாவிரதத்துக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களையும், அன்னை பூபதியின் பிள்ளைகள் சிலரையும், இந்திய இராணுவம் கைது செய்தது. ஆயினும், போராட்டம் நிறுத்தப்படவில்லை. அவர் உறுதியாகப் போராட்டத்தைத் தொடர்ந்தார்.

கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படாத நிலையில் சரியாக ஒரு மாதத்தின் பின் 19.04.1988 அன்று காலை 8.45 மணிக்கு அன்னை பூபதி உயிர் நீத்தார்.

### முக்கிய பிரச்சினைகளை...

திஸாநாயக்க தற்போது கவனம் செலுத்துகின்றார் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் குற்றஞ்சாட்டினார்.

பௌத்த மதவாதத்தின் ஊடாக ஜனாதிபதி அரசியல் செய்கின்றார் என்றும் அவர் சாடினார்.

ஏறாவூர் நகர சபையில் போட்டியிடும் இலங்கை தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்களுக்கான அறிமுகக் கூட்டமும் மற்றும் தேர்தல் பிரச்சாரக் கூட்டமும் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றபோது அங்கு உரையாற்றுகையிலேயே சாணக்கியன் எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“கடந்த ஆட்சியில் மஹிந்த மற்றும் அவரது சகாக்கள் விகாரைகள் மற்றும் புத்த பிக்குகளிடம் சரணடையும்போது, குண்டர்கள் தங்கள் பிழைகளை மறைக்க ஓடி ஒளிக்கும் இடம்தான் இவ்வாறான மதஸ்தானங்கள் என்று தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கூறியிருந்தார்.

ஆனால், அவர் தற்போது புத்தரின் புனித சின்னங்களைக் காட்சிப்படுத்தும் முக்கிய நிகழ்வுகளில் முன்னிலை வகிக்கின்றார். ஆனால், எமது நாட்டின் முக்கிய பிரச்சினைகளை மூடி மறைப்பதில் ஜனாதிபதி அநுரகுமார தற்போது கவனம் செலுத்துகின்றார்.” – என்றார்.




# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் இன்று நினைவேந்தப்பட்ட அன்னை பூபதி!

**(கி.வசந்தன்)**

வவுனியாவில் அன்னை பூபதியின் 37 ஆவது நினைவேந்தல் நிகழ்வு தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தால் இன்று நடத்தப்பட்டது.

அவர்கள் தொடர் போராட்டம் மேற்கொண்டு வரும் வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு முன்பாக உள்ள கொட்டகையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது அன்னை பூபதியின் திருவுருவப் படத்துக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர்,

“தமிழ் மக்களின் இறைமையைப் பாதுகாப்பதற்காகவும், உரிமைகளுக்காகவும் தன்னை அர்ப்பணித்த அன்னைக்கான அஞ்சலியைத் தமிழர் தேசம் இன்று செலுத்திக் கொண்டிருக்கின்றது.

தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்ட விடயத்தை சர்வதேசப் பொறிமுறையூடாக சர்வதேச மத்தியஸ்தத்தின் ஊடாகவே தீர்க்க முடியும். குற்றவாளிகளே பிரச்சினையைத் தீர்ப்பது நீதியாக அமையாது.

அத்துடன் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான தீர்வைப் பெறுவதற்குத் தமிழ் இறையாண்மை அவசியமான ஒன்று. அதனை நோக்கியே எமது போராட்டங்கள் அமைந்துள்ளன. எதிர்காலத்திலும் தமிழ் இறையாண்மை எமக்குத் தேவை என்ற விடயத்தைத் தொடர்ச்சியாக சர்வதேசத்துக்கு உரத்துச் சொல்வோம்.” – என்றனர்.







# காரைதீவு பகுதியில்  திடீர் சோதனையில் சிக்கிய நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவு!

(பாறுக் ஷிஹான்)

பொது மக்களுக்கு சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு மிக்க உணவுகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் கல்முனை பிராந்தியத்தில் உள்ள உணவகங்கள், உணவு கையாளும் நிறுனங்களை சோதனைக்கு உட்படுத்தும் விசேட வேலைத் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீனின் வழிகாட்டலுக்கு அமைய காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா வசீர்  தலைமையில் காரைதீவு பிரதேசங்களில் உள்ள பழக்கடைகள், ஹோட்டல்கள், வெதுப்பகங்கள் உள்ளிட்ட உணவு கையாளும் நிறுவனங்கள் என்பன திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது இந்த மாதம் பல்வேறு உணவு பாதுகாப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. உணவகங்கள், பல்பொருள் அங்காடிகள், மீன்வாடிகள், பழ விற்பனை நிலையங்கள், இறைச்சி விற்பனை நிலையங்கள், உணவு கண்காட்சிகள் மற்றும் நடமாடும் உணவு விற்பனை நிலையங்கள் போன்றன பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு சுகாதார ஆலோசனை வழங்கப்பட்டது. அத்துடன் உணவு சுகாதாரத்தை மீறிய நபர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது சுகாதார விதிமுறைகளை மீறிய உணவக உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற, பழுதடைந்த உணவுப் பொருட்களும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. அத்துடன் பாவிக்க முடியாத, சேதமடைந்த உணவு தாயாரிக்கும் பாத்திரங்களும் மீட்கப்பட்டன.

பிராந்தியத்தில் உள்ள உணவகங்கள், உணவு கையாளும் நிறுவனங்கள் சோதனைக்கு உட்படுத்தும் வேலைத் திட்டம் பிராந்திய பணிப்பாளர் உத்தரவுக்கு அமைவாக தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இந்தத் திடீர் சோதனை நடவடிக்கையில் பிராந்திய மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர், உணவு மருந்துகள் பரிசோதகர் உள்ளிட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஈடுபட்டனர்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மீண்டும் சிக்கன்குனியா!

இலங்கையில் சிக்கன்குனியா நோய் பரவல் சடுதியாக அதிகரித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அதைக் கட்டுப்படுத்துவதற்கான பொருத்தமான வழிகாட்டுதல்களை வெளியிடத் தவறியமைக்காக சுகாதார அதிகாரிகள் மீது விமர்சனங்கள் எழுந்துள்ளன.

டெங்குவைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் நீண்ட காலமாக நடைமுறையில் இருந்தாலும், சிக்குன்குனியா பரவுவதை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது குறித்து சுகாதார அதிகாரிகளிடமிருந்து மக்களுக்கு சரியான வழிகாட்டுதல் இல்லை என்று அகில இலங்கை சுகாதாரப் பரிசோதகர்கள் தொழிற் சங்கத் தலைவர் உபுல் றோஹண தெரிவிக்கின்றார்.

“இரண்டு நோய்களும் ஒரே நுளம்பு இனத்தால்தான் பரவுகின்றன. மேலும் பெரும்பாலும் ஒரே மாதிரியான தடுப்பு நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன என்பதும் உண்மைதான். இருந்தபோதிலும், சில பிரச்சினைகள் உள்ளன. டெங்கு கட்டுப்பாட்டுக்கான கருவிகள் மற்றும் முறைகள் ஏற்கனவே எங்களிடம் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் அவற்றை சிக்குன்குனியாவில் பயன்படுத்த எங்களுக்கு அறிவுறுத்தப்படவில்லை. இது எங்களைக் குழப்பத்தில் ஆழ்த்துகிறது.’’ - என்று உபுல் றோஹண குற்றம் சாட்டினார்.

“டெங்கு பாதிப்பு குறைந்து வருவதாகத் தோன்றினாலும், நாட்டின் பல பகுதிகளில் சிக்குன்குனியா தொற்று அதிகரித்து வருவது நிலைமையை மேலும் கவலையடையச் செய்கிறது’’ - என்றும் அவர் மேலும் கூறினார்.

சிக்குன்குனியா நேரடியாக ஒருவருக்குப் பரவாது. ஆனால் அது நுளம்பு கடித்தால் மட்டுமே பரவுகிறது என்று சுகாதார நிபுணர்கள் கூறுகின்றனர்.

சிக்குன்குனியா நோயாளிகளுக்கு நோய் குணமடைந்த பிறகு மூட்டு வலி குறைவதற்கு குறைந்தது ஒரு மாதமாவது செல்லும். சில சமயங்களில் இன்னும் நீண்ட காலம் நீடிக்கும் என்றும் டாக்டர்கள் விவரிக்கின்றனர்.

திடீரென அதிக காய்ச்சல், கடுமையான மூட்டு வலி, தசை வலி, தலைவலி, குமட்டல், சோர்வு மற்றும் தோல் வெடிப்புகள் ஆகியவை இத்தொற்றுக்கான முக்கிய அறிகுறிகளாகும்.

பெரும்பாலான மக்கள் ஒரு வாரத்தில் குணமடைந்தாலும், மூட்டு வலி மாதங்கள் அல்லது ஆண்டுகள் கூட நீடிக்கும் - குறிப்பாக வயதானவர்களுக்கு என்றும் கூறப்படுகின்றது.

இந்த சிக்குன்குனிய இலங்கைக்குப் புதியதல்ல. 1965 இல் இது கொழும்பில் தோன்றி 1965 ஆண்டு மே முதல் ஜூன் வரை நீர்கொழும்பு முதல் மாத்தறை தென்மேற்கு கரையோரப் பகுதியில் பரவியது.

இலங்கையில் 2006 -07 ஆம் ஆண்டுகளில் சிக்குன்குனியா நோய் பரவியமை மறக்கக் கூடியதல்ல. சுமார் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நோயளர்களை இது அப்போது முறித்துப் போட்டது. அப்போது மட்டக்களப்பு, கொழும்பு, யாழ்ப்பாணம், கல்முனை, மன்னார், புத்தளம் மற்றும் திருகோணமலை உள்ளிட்ட கடலோரப் பகுதிகளையே இது அதிகம் பாதித்தது. கண்டி, குருநாகல், மாத்தளை மாவட்டங்கள் இத்தொற்றால் குறைவாகவே பாதிக்கப்பட்டன.

மீண்டும் தலையெடுத்து சந்நதம் ஆட அது தாயாராகி வருகின்றது என்றே தோன்றுகின்றது.

VOTE

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்



## வவுனியா பொங்கு தமிழ் நினைவுத் தூபியில்

# அன்னை பூபதிக்கு அஞ்சலி செலுத்திவிட்டு தேர்தல் பரப்புரையை ஆரம்பித்த முன்னணி

(கி.வசந்தன்)

வவுனியா மாநகர சபை முன்றலில் அமைந்துள்ள பொங்கு தமிழ் நினைவுத் தூபியில் அன்னை பூபதிக்கு அஞ்சலி செலுத்திவிட்டு மாநகர சபைக்கான தேர்தல் பரப்புரையைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இன்று ஆரம்பித்தது.

அன்னை பூபதியின் 37 ஆவது ஆண்டு நினைவு வணக்க நிகழ்வு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் எஸ்.தவபாலன் தலைமையில் பொங்கு தமிழ் நினைவுத் தூபி முன்றலில் இன்று இடம்பெற்றது. இதன்போது அன்னை பூபதியின் திருவுருப் படத்துக்குத் தீபம் ஏற்றியும், மலர் தூவியும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது, வவுனியா மாநகர சபையில் போட்டியிடும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளர்கள், ஆதரவாளர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் எனப் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து வேட்பாளர்கள் தமது துண்டுப் பிரசுரங்களை வழங்கி வவுனியா நகரில் பிரச்சார நடவடிக்கைகளை ஆரம்பித்தனர்.









# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்





## முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளருக்கு கற்பிட்டியில் மகத்தான வரவேற்பு

**(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)**

கற்பிட்டி பிரதேச சபை தேர்தலில் புதுக்குடியிருப்பு, டச்பே, முகத்துவார கிராமங்களை உள்ளடக்கிய பள்ளியாவத்தை வட்டாரத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சார்பாக மரச் சின்னத்தில் களம் இறங்கி இருக்கும் வேட்பாளர் ஏ.ஆர்.எம் முஸம்மிலுக்கு புதுக்குடியிருப்பு கிராம மக்கள் மகத்தான வரவேற்பளித்தனர்.

புதுக்குடியிருப்பு கிராமத்து பெண்களால் ஏற்பாடு செய்யப்பட்ட வரவேற்பு நிகழ்வில் கற்பிட்டி நகர தலைமை வேட்பாளர் ஏ.ஆர்.எம். முஸம்மில் மற்றும் பட்டியல் வேட்பாளர் எம்.டி றிப்கான் ஆகியோருடன் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங் கிரஸ் கற்பிட்டி முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## ஐக்கிய சமாதான கூட்டமைப்பு வேட்பாளர்களுடன் சந்திப்பு



**(றிபாஸ்)**

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய சமாதான கூட்டமைப்பில் காரைதீவு பிரதேச சபைக்கு போட்டியிடும் மாவடிப்பள்ளி, மாளிகைக் காடு வேட்பாளர்களுடனான சந்திப்பு இடம்பெற்றது.கட்சியின் பிரதி தலைவர் டாக்டர் ஷரீஃப் ஹக்கீம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், பிரமுகர்கள் மற்றும் வேட்பாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்




# நீர்கொழும்பில் மாபெரும் தேர்தல் பிரசாரக் கூட்டம்

(எஸ். சினீஸ் கான்)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் நீர்கொழும்பு மாநகர சபையில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து மாபெரும் தேர்தல் பிரசார பொதுக் கூட்டம் நீர்கொழும்பு பெருத்தோட்ட பிரதேசத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் கலந்து கொண்டார்.

இதன்போது, முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் ஷாபி றஹீம், கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், பிரதேச மத்திய குழு உறுப்பினர்கள், நீர்கொழும்பு மாநகர சபை வேட்பாளர்கள், கட்சி முக்கியஸ்தர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# மரச் சின்னத்துக்கு வாக்குகளை அளித்து முஸ்லிம் காங்கிரஸைப் பலப்படுத்துங்கள்

## கம்பஹா கட்டான பிரதேசத்தில் ஹிஸ்புல்லாஹ் தெரிவிப்பு

(எஸ். சினீஸ் கான்)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில், கட்டான பிரதேச சபையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக போட்டியிடும் வேட்பாளர் சஹ்ரானை ஆதரித்து, மக்கள் சந்திப்பு இடம்பெற்றது.



ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் இதில் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

அவர் இதன்போது கருத்துதெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியலிலேயே உள்ளூராட்சி சபைகளின் அதிகாரம் முக்கியமான ஒன்றாகக் காணப்படுகிறது. அதை கைப்பற்றும் போதுதான் எதிர்காலங்களில் மாகாண சபை மற்றும் நாடாளுமன்றம் போன்ற அதிகாரங்களை கைப்பற்ற முடியும்.

நீர்கொழும்பானது முதலாவது முஸ்லிம் மாகாண சபை உறுப்பினர் மர்ஹூம் அனீஸ் ஷரீபின் பிரதேசம். ஆகவே அந்தப் பிரதேசம் மீண்டும் அதிகாரத்தை கைப்பற்ற வேண்டும். கடந்த தேர்தலில் 30 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குகளை பெற்றும் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை பெற முடியாமல் போனது. ஆகவே எதிர்காலத்தில் எங்களுடைய நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை பாதுகாப்பதற்கு இந்தச் சந்தர்ப்பத்தை நீங்கள் பயன்படுத்தவேண்டும் என்பதோடு உச்ச அதிகாரங்களை பெற்றுக் கொள்ள வேண்டும்.

அதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கும். எனவே நீங்கள் அனைவரும் இந்தத் தேர்தலில் மரச் சின்னத்துக்கு வாக்களித்து முஸ்லிம் காங்கிரஸின் கரத்தை பலப்படுத்தவேண்டும். குறிப்பாக நீர்கொழும்பு மாநகர சபை அதிகாரத்தை தீர்மானிக்கும் சக்தியாக நமது கட்சியை மாற்றவேண்டும். அதேபோன்று கட்டான பிரதேச சபைத் தேர்தலிலும் எமது கட்சியில் பலத்தை அதிகரிக்க வேண்டும்.- என்றார்.

இந்த நிகழ்வில் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் ஷாபி றஹீம், கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், கம்பஹா மாவட்ட முக்கியஸ்தர்கள், கட்டான பிரதேச கட்சியின் மத்திய முழு உறுப்பினர்கள், ஊர்ப்பிரமுகர்கள், பொது மக்கள் என பலரும் பங்கேற்றிருந்தனர்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

## தமிழ் கட்சிகளுக்கே ஆணை வழங்குங்கள்!

### அம்பாறை தமிழர்களிடம் வேட்பாளர் ஜெயசிறில் கோரிக்கை

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட தமிழர்கள் தமிழரசுக் கட்சிக்கும், தமிழ் தேசியக்கட்சிகளுக்குமே ஆணை வழங்கவேண்டும். இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச சபையை வழமை போல் இந்த முறையும் கைப்பற்றும்.

இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு கிளைத் தலைவரும், முன்னாள் தவிசாளரும், இந்நாள் வேட்பாளருமான கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில் சூளுரைத்தார்.

அவரது வட்டாரத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் பேசிய போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வேட்பாளர் கி.ஜெயசிறில் மேலும் தெரிவிக்கையில்,

தொடர்ச்சியாக இலங்கை தமிழரசுக் கட்சி காரைதீவு பிரதேச சபையை கைப்பற்றி வருகின்றது. இந்த முறையும் இலங்கை தமிழரசுக் கட்சியே காரைதீவு பிரதேச சபையில் ஆட்சி அமைக்கும்.

அதேபோன்று அம்பாறை மாவட்டத்திலும் அதிகப்படியான உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றும். ஏன் என்றால் இங்கு உண்மையான உணர்வுள்ள தமிழர்கள் இருக்கின்றார்கள்.

அவர்கள் இனம் சார்ந்த நிலம் சார்ந்து சிந்திக்கின்றார்கள். எமது மக்களை எமது மக்கள்தான் ஆள வேண்டும்.

உள்ளூராட்சி தேர்தலில் எம் மக்கள் வாக்குகளை உறவினர், நண்பர்கள் தெரிந்தவர் என்று சிதைத்துவிடக் கூடாது.



இந்த நாட்டில் தமிழன் வாழ்கின்றான் என்பதை இற்றைவரைக்கும் அடையாளப்படுத்துவது தமிழ்த் தேசியக் கட்சிகளில் நாங்கள் வென்றெடுக்கும் எமக்கான பிரதிநிதித்துவங்களே.

எம்மினைத்தை அடக்கி ஆளவேண்டுமாயின் எம்மிடத்தே வேறூன்றியிருக்கும் தமிழ்த் தேசிய அரசியலை மலினப்படுத்தி அழிக்கவேண்டும். இதற்காகவே காலாகாலம் பல்தரப்பட்ட முயற்சிகளைப் பெரும்பான்மை அரசியல்வாதிகள் மேற்கொண்டுள்ளனர்.

இதற்காகப் பயன்படுத்தப்படும் ஏவல் பேய்களே இன்றைய பெரும்பான்மைக் கட்சி வேட்பாளர்களும் அவர்களது சுயேச்சை வேட்பாளர்களும். எம்மினத்தின் அடையாளம் எமக்கான இருப்பு தமிழ்தேசிய அரசியலே. இதற்காகவே மக்கள் ஆணை வழங்கினார்கள் இனியும் வழங்குவார்கள்.

இன்று எம்மக்களில் சிலர் மாற்றத்துக்காக வாக்களித்துப் பெற்ற பெரும்பான்மை கட்சிகளில் தமிழ் பிரதிநிதிகள் கண்ணிருந்தும் குருடர்களாகவும் வாய் பேசா பொம்மைகளாகவும் காணப்படுகின்றனர். இது எம்மக்களுக்கு பாரிய ஏமாற்றத்தைத் தந்துள்ளது.

அன்று எம்மக்களைத் திசை திருப்பி அபிவிருத்தி அரசியல் எனும் மாயையைக் காட்டி சில எலும்புத் துண்டுகளின் பின்னால் சென்ற அரசியல் மேதாவிகள் இன்று அரசியல் அனாதைகளாக் கப்பட்டுள்ளனர். இவர்கள் பின்னால் சென்ற ஒருசில மக்களும் இன்று தெளிவடைந்து தமிழ்தேசிய அரசியலை ஏற்று எமக்கான நாடாளுமன்ற பிரதித்துவத்தினை அம்பாறையில் கௌரவமாக வென்றெடுத்துள்ளார்கள்.

இன்றைய அம்பாறைத் தமிழரது ஒற்றுமையைச் சீர்குலைத்து இங்கு எமது அடையாளத்தை அழிக்க மாற்றினக் கட்சிகள் எமக்கெதிரான மிகவும் சூட்சுமமான வியூகங்களை அமைக்கிறார்கள். இவர்களது நிகழ்ச்சி நிரலுக்காக எம்மினத்தில் சில கைக்கூலிகள் இவர்களது முகவர்களாக செயல்படுகின்றார்கள்.

அம்பாறையில் எமது அடையாளத்தை உறுதிப்படுத்தி எமக்காக இருப்பைத் தக்கவைக்க எமக்கான சிறந்த அரசியல் கட்டமைப்பு காணப்பட வேண்டும்.

இந்தக் கட்டமைப்புக்கான பலமான அஸ்திவாரம் அமைய வேண்டுமாயின் உள்ளூராட்சி சபைகளை நாங்கள் வென்றெடுக்க சத்தியமானதும் சாத்தியமானதுமான வழி எம் மக்கள் தமிழரசுக் கட்சிக்கு ஆணைவழங்கி தமிழ்த் தேசிய கூட்டமைப்பாக தமிழரின் ஆதிக்கத்துக்கு உட்பட்ட அனைத்து சபைகளிலும் ஆட்சியமைக்க வேண்டும்.

நாம் தூய்மையான அரசியலை முன்னெடுத்து நிலையான அபிவிருத்தியை நோக்கி எமது இருப்பை தக்க வைக்கும் நோக்கில் செயற்படுவோம். -என்றார்.

## குச்சவெளி வேட்பாளர்களை ஆதரித்து பிரசார நிகழ்வு


(ஹஸ்பர்)



நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலை முன்னிட்டு திருகோணமலை மாவட்ட குச்சவெளி பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் போட்டியிடும் புல்மோட்டை மற்றும் குச்சவெளி வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சார நிகழ்வு இடம்பெற்றது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து இடம் பெற்ற குறித்த கூட்டங்களில் குறித்த கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிசாட் பதியுதீன் கலந்து கொண்டார்.





# சந்நிதியான் ஆச்சிரமத்தில் அருளுரையும் உதவித்திட்டமும்



சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில், ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வும் அருளுரையும் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம் பெற்றன.

ஆன்மீக அருளுரையாக மகாபாரதம் என்ற தொடர் சொற்பொழிவு இடம்பெற்றது. ஆசிரியர் இரா.செல்வவடிவேல் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

உதவித் திட்டமாக, கெருடாவில் தெற்கு, தொண்டைமானாற்றை சேர்ந்த இளந்துளிர் அமையத்தின் கோரிக்கைக்கு அமைவாக, சித்திரை வருட நிகழ்வுக்காக 30 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டது.



# திரியாய் பர்வதவர்த்தினி ஆலய கும்பாபிஷேகம்

**(வடமராட்சிச் செய்தியாளர்)**

இயக்கச்சி திரியாய் ஸ்ரீபர்வத வர்த்தினி அம்பாள் ஆலய கும்பாபிஷேகம் வெள்ளிக்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது.








# தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுடன் சம்மாந்துறை பொலிஸார் கலந்துரையாடல்

(பாறுக் ஷிஹான்)

நடைபெறவிருக்கும் 2025 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சம்மாந்துறை பிரதேச சபைக்கு கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுடனான கலந்துரையாடல் சம்மாந்துறை பொலிஸ் நிலைய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலானது சம்மாந்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி கே.டி.எச்.ஜெயலத் வழிகாட்டலில் சம்மாந்துறை பிரதேச சபை தேர்தல் நடவடிக்கைக்கான பொறுப்பதிகாரி ஏ.எம். நெளபர் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது 2025 உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பின்பற்ற வேண்டிய சட்டங்கள், பொலித்தீன் பாவிப்பது தொடர்பில் தெளிவூட்டல், சட்டவிரோமாக தேர்தல் போஸ்டர்கள் ஒட்டுதலைத் தவிர்த்தல், தலை கவசமின்றி தேர்தல் பிரச்சாரம் செய்வதை தவிர்த்தல், சட்டவிரோதமாக ஊர்வலம் செல்வதை தவிர்த்தல், சட்டவிரோத ஒலிபெருக்கி பாவனையை குறைத்தல் தொடர்பான தெளிவூட்டலை வழங்கினர்.

எதிர்வரும் தேர்தல் பிரச்சாரத் தின்போது பின்பற்ற வேண்டிய சட்ட நடைமுறைகள் மற்றும் வேட்பாளர் ஒருவர் பிரச்சாரத்தின்போது கடைப் பிடிக்க வேண்டிய விடயங்கள் தெளிவு படுத்தப்பட்டன. இது தவிர தேர்தல் தொடர்பான தற்போதைய நிலைமைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் சம்மாந்துறை பிரதேச சபையில் போட்டியிடும் கட்சிகள் மற்றும் சுயேட்சைக்குழு வேட்பாளர்கள் கலந்துகொண்டனர்.




# புதிய அலை கலை வட்டத்தின் இளைஞர் அணி நிர்வாகிகள்!

புதிய அலை கலை வட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் தெரிவு கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு-13, புதுச்செட்டி தெரு, எக்சலன்ஸ் சர்வதேச பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது.

அமைப்பின் ஸ்தாபகர் ராதாமேத்தா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் – எஸ். எம்.சிரோன், உபதலைவர் – எஸ். திவாகர், செயலாளர் – கே.கிரிஷா, உபசெயலாளர் – கே.அனானிக்கா, பொருளாளர்– எ.அனிஸ் கோவில்ஸ்ரன, உப பொருளாளர் – எம்.ஆர்.தனுஷன், இணைப்பாளராக பி.அக்ஷயா மற்றும் பவிஹரணி வி.டிலுக்ஸன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்தக் கூட்டத்துக்கான ஏற்பாடுகளை கலைஞர்களான சண்மு, மாகிரட் மற்றும் அழகேஸ்வரன் ஆகியோர் மேற்கொண்டிருந்தனர்.

GSM GUNAAM'S SUPERMARKET
குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998








# லண்டனைக் கலக்கும் இளம் பாடகர் ரய்யான்!

லண்டனின் கிரிஸ்டல் கிராண்ட் ஸ்லோவில் யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், மிகப் பிரமாண்டமாக இசை நிகழ்ச்சி ஒன்றை அண்மையில் நடத்தியது.

இதில் பெருதும் எதிர்பார்க்கப்பட்ட இளம் பாடகர்களுக்கான "Golden Voice" போட்டியில், 15 வயதான இளம் பாடகர் ரய்யான் அரிஃப் மகுடம் சூடி சாதித்தார்.

இந்தப் பாடல் போட்டிக்கான தெரிவுகள் கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்றன.

'சூப்பர் சிங்கர்' வெற்றியாளர் நிகேல் மத்யூ மற்றும் புகழ்பெற்ற கலைஞர் கிஷ்ணர் ஆகியோர் இறுதிப் போட்டிக்கான போட்டியாளர்களைத் தேர்வு செய்தனர்.

இறுதிப் போட்டியில் பங்கேற்றவர்கள், தங்களது திறமைகளை நேரடியாகவே பார்வையாளர்களுக்கு விருந்தாக அளித்தனர்.

இறுதிச் சுற்றில் நடுவராக தென்னிந்தியப் பிரபல பாடகர் கலைமாமணி மனோ பணியாற்றினார்.

இந்த இறுதிப் போட்டியில் மகுடம் சூடிய, இந்திய வம்சாவழியான ரய்யான், தனது கவர்ச்சிகரமான கலைப் பயணத்தால் ஏற்கனவே பிரபலமானவர்.




தனது 8 வயதில் இசைப் பயணத்தைத் தொடங்கிய இவர், இசைத் துறையில் கோலோச்சிய இசைக்கலைஞர்களால் வழிநடத்தப்பட்டார்.

அவர் கர்நாடகா மற்றும் இந்துஸ்தானி இசையில் தனது குரல் திறமைகளை மேம்படுத்திக்கொண்டு, பிரபலமான, இசைக் கூடத்தில் மேற்கத்தேய இசைக் கருவிகளுக்கான பயிற்சிகளைப் பெற்றுவருகின்றார்.

அதேவேளை, The Voice Art Academy யில் குரல் பயிற்சியையும் பெற்று வருகிறார்.

இவர் தமிழ், இந்தி மற்றும் பஞ்சாபி ஆகிய மூன்று மொழிகளிலும் எளிதாகப் பாடுவதன் மூலம், அவரது பல்துறை திறமை பலரையும் சென்றடைந்தது.

London இல் நடைபெற்ற பல்வேறு நிகழ்வுகளில், BECK தியேட்டர் மற்றும் வாட்டர்ஸ்மீட் தியேட்டர் போன்ற இடங்களில் பார்வையாளர்களைக் கவர்ந்த ரய்யான், தனது திறமைகளை மேம்படுத்தி இசைச் சமூகத்தில் தனது பெயரை நிலைநாட்டியுள்ளார்.

பிரபலமான போட்டிகளில், ரய்யான் வென்ற பட்டங்கள்:

லண்டனில் 2023இல் தமிழ் சங்கத்தால் நடத்தப்பட்ட 13 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான போட்டியில் வெற்றியாளராக கிரீடம் சூட்டியுள்ளார், இந்தியாவைச் சேர்ந்த திருமதி மஹதி நடுவராகக் கடமையாற்றிய மதிப்புமிக்க பிரியா ராகங்கால் போட்டியில் (2023) பட்டம் வென்றவர், துளிர் தமிழ் திறமை நிகழ்ச்சியில் (2023) சிறந்த பாடகராக வெற்றி பெற்றார், பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் BYITC விருது (2024), பிரிட்டனில் (2024) வளர்ந்து வரும் இளம் கலைஞர் விருது, UK, Sound and Music வழங்கும் "In the Making" நிகழ்ச்சிக்காக 50 இளம் இசையமைப்பாளர்களில் ஒருவராக விருது.





# கல்வியில் கடை மட்டத்தில் உள்ளவர்களையும் நட்சத்திர வீரர்களாக்குவது விளையாட்டுத்துறை

## பருத்தித்துறை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தெரிவிப்பு

(வடமராட்சிச் செய்தியாளர்)

கல்வியில் கடை மட்டத்தில் உள்ளவர்களையும் சர்வதேச ரீதியில் நட்சத்திர வீரர்களாக வலம்வர வைப்பது விளையாட்டுத்துறையே என்று பருத்தித்துறை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு பெண்களுக்கான மாபெரும் கரப்பந்தாட்டப் போட்டி நேற்று (18) வடமராட்சி கிழக்கு செம்பியன் விளையாட்டுக் கழகத் தலைவர் கிருஸ்ணபிள்ளை புஸ்பராசா தலைமையில் இடம்பெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இன்றைய காலகட்டத்தில் பல தகவல் தொழிநுட்ப இலத்திரனியல் சாதனங்களின் பாவனைகள் அதிகரித்துள்ள நிலையில் இளம் சமூகத்தினர் அதில் மூழ்கி வருவதை அவதானிக்க கூடியதாகவுள்ளது.

ஆயினும் ஆர்வமுள்ளவர்கள் ஆரோக்கியமான விளையாட்டுத் துறையில் ஈடுபடுவதை பார்க்கும்போது மகிழ்ச்சியாகவுள்ளது. விளையாட்டின் மூலம் ஒரு வீரனது உடல், ஆற்றல், சிந்தனை உற்சாகமடைகிறது. அவனது கல்வி கடைமட்டத்தில் இருந்தாலும் கூட அவன் நட்சத்திர வீரனாக பிரகாசிக்கின்றான்.

எனவே வளங்கள் குறைந்த நிலையில் உள்ள எமது பகுதி விளையாட்டு கழகங்கள் விளையாட்டு ஆர்வத்தில் உள்ளமையை பார்க்கும் போது பெருமையாகவுள்ளது. அதிலும் பெண்களுக்கான கரப்பந்தாட்ட நிகழ்வை முதல் தடவையாக எமது பகுதிக் கழகங்கள் முன்னெடுத்துள்ளன. அது சிறந்த செயற்பாடுகள். இதனை ஊக்குவிக்க அரசு கவனம் செலுத்த வேண்டும்.- என்றார்.

சித்திரை புத்தாண்டு மகளிருக்கான கரப்பந்தாட்ட நிகழ்வில் மாமுனை கலைமகள் விளையாட்டுக் கழகமும் செம்பியன் விளையாட்டுக் கழகமும் இறுதி சுற்றுக்குத் தெரிவாகின. இறுதிப் போட்டியில் மாமுனை கலைமகள் விளையாட்டுக் கழகம் வெற்றிக் கேடயத்தை கைப்பற்றியது.









# தமிழ்நாடு ஆளுநர் விருது பெற்ற லலீசனுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நேற்று கௌரவம்

இந்தியா தமிழ்நாடு ஆளுநர் விருதைப் பெற்றுக் கொண்ட சொற்பொழிவாளர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் சந்நிதியான் ஆச்சிரம கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமிகளாலும் ஆச்சிரம தொண்டர்களாலும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

நேற்று வெள்ளிக்கிழமை ஆச்சிரம சுவாமி தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது ஆச்சிரமத்தினர் சார்பில் பாராட்டுரையை சொல்லின் செல்வர் இரா செல்வ வடிவேல் நிகழ்த்தினார்.

ஆச்சிரம சுவாமி நினைவுச் சின்னம் கையளித்தார். ஆச்சிரமத் தொண்டர்களும் அடியவர்களும் லலீசனை பொன்னாடை போர்த்தியும் மாலை அணிவித்தும் கௌரவித்தனர்.

சொற்பொழிவாளர் லலீசன் 1998 ஆம் ஆண்டு பலாலி ஆசிரிய கலாசாலை மாணவனாக சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டு சந்நிதியான் ஆச்சிரமத்தில் முதன் முதலாக பொது வெளியில் தனது சொற்பொழிவை ஆரம்பித்து இன்று இந்த உயர் நிலையை அடைந்துள்ளார் என்று ஆச்சிரம சுவாமிகள் இதன்போது பாராட்டுத் தெரிவித்தார்.





















# அன்னை பூபதி தியாகத் தாய்!

### அவரது 37 ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று



நடராஜன் ஹரன்

தமிழ் மக்களின், உரிமைக்காக 1988.04.19 ஆண்டு உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்தவர் பூபதியம்மா.

பூபதியம்மாவின் 37 ஆண்டு அனுஷ்டிக்கப்படு கின்றது. அன்னை பூபதி என்று அழைக்கப்படும் தாய் இந்தியப் படைகளுக்கு எதிராக சாகும்வரை உண்ணா விரதமிருந்து உயிர்நீத்த நாள் ஏப்ரல் 19.

பூபதியம்மாவின் கணவர் பெயர் கணபதிப்பிள்ளை. பத்துப் பிள்ளைகளின் தாய். மட்டு. – அம்பாறை அன்னையர் முன்னணியின் துடிப்புள்ள முன்னணிச் செயற்பாட்டாளர். புலிகளுக்கும் இந்திய அமைதிப் படைக்கும் சண்டை நடந்து கொண்டிருந்த காலம். இந்தியப்படை கிட்டத்தட்ட மக்கள் வாழிடங்கள் அனைத்தையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டிருந்த காலம். அந்த இடைபட்ட காலத்துள் நடந்த கொடுமைகளை விவரிக்கவோ விளங்கப் படுத்தவோதேவையில்லை.

இந்த நிலையில் தான் இந்தியப்படைக்கு எதிராகக் குரல் கொடுக்க, சாத்வீக போராட்டங்களை நடத்த மட்டு. –அம்பாறை மாவட்ட அன்னையர் முன்னணி முடிவு செய்தது. அவர்கள் இரண்டு கோரிக்கையை வைத்து இந்திய அரசுக்கு எதிராக உண்ணா விரதப் போராட்டத்தைத் தொடங்கினர்.

1.உடனடியாக யுத்த நிறுத்தத்தை அமுல்படுத்த வேண்டும்.

2. புலிகளுடன் பேச்சு நடத்தித் தீர்வு காணவேண்டும்.

அன்னையர் முன்னணியின் கோரிக்கைகள் எதுவுமே இந்தியப் படையினரின் கவனத்தை ஈர்க்க வில்லை. ஆனால் தமிழ்ப் பெண்கள் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் அணி திரண்ட நிலையில் 1988 ஆம் ஆண்டு ஜனவரி 4 ஆம் திகதி அன்னையர் முன்னணியைத் திருமலைக்குப் பேச்சு வார்த்தைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது.

இதற்கமைய சென்ற அன்னையர் முன்னணிக் குழுவினருடன் இந்தியப் படையின் உயர் அதிகாரியான பிரிக் கேடியர் சண்டேஸ் பேச்சு நடத்தினார். இந்தப் பேச்சுக்களின் போது அன்னையர் முன்வைத்த இரு கோரிக்கை களையுமே மீளவும் நினைவூட்டினர். ஆனால் கோரிக்கைகள் எதுவும் நிறை வேற்றப்படவில்லை. போராட்டம் தொடர்ந்து நடந்தது.

இந்த நிலையில் 1988 ஆம் ஆண்டு பெப்ரவரி 10 ஆம் திகதி அன்னையர் முன்னணியின் நிர்வாகக் குழுவினரை இந்தியா பேச்சு வார்த்தைக்கு மீண்டும் அழைத்தது. இதற்கமைய கொழும்பு சென்ற அன்னையர் முன்னணியின் நிர்வாகக் குழுவினருடன் பேச்சுக்களை மேற்கொண்ட இந்திய அதிகாரிகள் விடுதலைப் புலிகள் இந்தியப் படையிடம் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர். இதனைக் கடுமையாகக் கண்டித்த அன்னையர் முன்னணியினர், விடுதலைப் புலிகள் எங்கள் பாதுகாவலர்கள், நீங்கள்தான் போர் நிறுத்த உடன் பாட்டுக்கு வரவேண்டும் எனத் தெரிவித்தபோது அந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட இந்தியத் தூதுவர் டிக்சீத் அன்னையர் முன்னணி மீது கடுமையாக ஆத்திரத்தைக் கொட்டி தீர்த்துள்ளார்.

நிலமை மோசமாகிக் கொண்டே சென்ற நிலையில் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடக்கத் தீர்மானித்தனர். அப்போது பலர் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிப்பதற்காக முன் வந்தனர். இறுதியில் குலுக்கல் முறையில் தேர்வு இடம் பெற்றது. முதலில் அன்னம்மா டேவிட் தெரிவு செய்யப்

தொடர்ச்சி▼

# அன்னை பூபதி தியாகத் தாய்!

தொடர்ச்சி▲

பட்டார். 1988ஆம் ஆண்டு பெப்ரவரி 16 ஆம் நாள் அன்னம்மா டேவிட் அன்னையர் முன்னணி சார்பாக உண்ணாவிரதத்தில் குதித்தார். அமிர்தகழி மாமாங் கேஸ்வர் ஆலய குருந்தை மரநிழலில் அன்னம்மாவின் உண்ணாவிரதப்போராட்டம் தொடங்கப்பட்டது. இந்திய அரசோ, இந்தியப் படையோ அன்னம்மாவின் போராட் டத்துக்குச் செவிசாய்க்கவில்லை. மக்கள் அமிர்தகழி குருந்தை மரம் நோக்கி அணி அணியாகத் திரண்டனர். உண்ணாவிரதத்தை முடிவுக்குக் கொண்டுவர இந்தியப்படை திட்டமிட்டது. பல்வேறு மிரட்டல், கெடுபிடிகளுக்கு மத்தியில் போராட்டம் தொடர்ந்தது.

இறுதியில் சதித்திட்டம் வரைந்தது இந்தியப் படை. அன்னம்மாவின் பிள்ளைகளைக் கைது செய்தனர். அவர்களை மிரட்டி 'பலாத்கார அச்சுறுத்தல் காரண மாகவே அன்னம்மா உண்ணா விரதமாயிருக்கிறார்' என்ற ஒரு கடிதத்தைக் கையொப்பத்துடன் வாங்கி, அதனைச் சாட்டாக வைத்து அன்னம்மாவைக் காப்பாற்றுவது போல் உண்ணாவிரத மேடையில் இருந்தவரைக் கடத்திச் சென்றனர்.

இந்த நிலையில்தான் பூபதியம்மாள் தன் போராட் டத்தைத் தொடங்க எண்ணினார். முன்னெச்சரிக்கையாக “சுயவிருப்பின் பேரில் உண்ணாவிரதமாயிருக்கிறேன். எனக்கு சுயநினைவிழக்கும் பட்சத்தில் எனது கணவனோ, அல்லது பிள்ளைகளோ என்னை வைத்தியசாலையில் அனுமதிக்க முயற்சிக்கக் கூடாது” எனக் கடிதம் எழுதி வைத்தார்.

உண்ணாவிரதப் போராட்டம் 19.03.1988 அன்று மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் அதேயிடத்தில் தொடங்கியது. நீர் மட்டும் அருந்தி சாகும்வரை போராட்டம்.

இடையில் பல தடங்கல்கள் வந்தன. இந்தியப் படையால் அன்னையர் முன்னணியினரிற் சிலர் வெருட்டப்பட்டனர். உண்ணாவிரதத்தைக் கைவிடும்படி பூபதியம்மாள் வற்புறுத்தப்பட்டாள். உண்ணாவிரதத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிய முக்கியஸ்தர்களையும் அன்னை பூபதியின் பிள்ளைகள் சிலரையும் இந்திய இராணுவம் கைது செய்தது. ஆயினும் போராட்டம் நிறுத்தப்பட வில்லை. அவர் உறுதியாகப் போராட்டத்தைத் தொடர்ந் தார்.

கோரிக்கைகள் ஏற்றுக கொள்ளப்படாத நிலையில் சரியாக ஒருமாதத்தின்பின் 19.04.1988 அன்று உயிர் நீத்தார். அவரது உடலைக் கைப்பற்ற இந்திய இராணு வம் எடுத்த முயற்சிக்கெதிராக மக்கள் கடுமையாகப் போராடி உடலைக் காத்தனர்.

ஏற்கனவே திலீபன் இந்திய அரசுக்கெதிராக நீராகாரம்கூட அருந்தாமல் பன்னிரண்டு நாட்கள் உண்ணா நோன்பிருந்து சாவடைந்தார். அதற்குப் பின்னும் உண்ணா நோன்பிருந்த பூபதியின் செயல் முட்டாள் தனமானது என்றுகூட அவர்மீது சிலர் விமர் சனங்கள் வைப்பதுண்டு. ஆனால் பொது மக்களி டமிருந்து தன்னிச்சையாக எழுந்த ஒரு போராட்டமிது. திலீபனின் சாவின் பின்னும் இந்திய அரசிடம் அவர்கள் நம்பிக்கை வைத்திருந்தார்கள் என்று கருதமுடியுமா என்று தெரியவில்லை. சொல்லப் போனால் திலீபனை விடவும் பூபதியம்மாவின் சாவு உறுதிப்படுத்தப்பட்ட ஒன்று என்றே நினைக்கிறேன். ஆனாலும் தங்கள் எதிர்ப்பைக் காட்ட அவர்கள் எடுத்த ஆயுதம் அது.




அன்றைய நேரத்தில் மட்டுமன்றி, பின்னாள்களில்கூட அகிம்சை பற்றி எங்களுக்கு யாரும் போதிக்க முன்னர் யோசிக்க வைக்கும் ஓர் ஆயுதம்தான் அன்னை பூபதியுடையது.

சாவு பற்றி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அபிப்பிராயம். அதன் மீதான பார்வையும் பெறுமதியும் சூழலைப் பொறுத்து மாறுபடும். சாவைத் தேர்ந்தெடுத்தல் என்பது அப்படி ஒன்றும் இமாலயச் சாதனையாகவோ செய்ய முடியாத தியாகமாகவோ பார்க்கும் நிலையைத் தாண்டி வந்தாயிற்று. ஆனால் அவை தெரிவு செய்யப் படும் விதம் பற்றி இருக்கும் மதிப்பீடுகள்தான் வித்தியா சமானவை. அவ்விதத்தில் அன்னை பூபதியுடைய, திலீபனுடைய வடிவங்கள் எம்மால் நெருங்க முடியாத, செய்ய முடியாத வடிவங்களாகப் பார்க்கிறேன்.

ஒவ்வொரு முறை திலீபன் நினைவுநாளுக்கும் உண்ணாமலிருப்பது பலரது வழக்கம். அன்றைக்குத் தெரியும் உண்ணா நோன்பின் வேதனை. (சிலநேரங்களில் இரண்டுநேரம் உணவின்றி வெறும் தண்ணியோடு சைக்கிளில் திரிந்த நிலைகூட உண்டு. ஆனால் அந்தநேரங்களில் வராத துன்பம், ஓரிடத்தில் இருந்து உண்ணாநோன்பென்று செய்தால் வந்துவிடும்.) பன்னிரண்டு நாள்கள் ஒருதுளி நீர்கூட அருந்தாது தன்னை ஒறுத்து – அணுவணுவாக என்று சொல் வார்களே– அப்படிச் செத்துப்போன திலீபனின் சாவை நினைத்துப் பார்க்கவும் முடியாது. அன்னை பூபதியின் சாவும் அப்படியே.

எது எப்படி எனினும் எமது தமிழர்கள் தன்மானத்துடன் வாழ ஏராளனமா தியாகிகள் வழிசமைத்தனர் எனினும் இன்றும் சில தியாகிகள் வாழ்ந்துகொண்டுதான் இருக்கின்றனர். நீ இருந்தாலும் இறந்தாலும் பிறர் உன் பேர் சொல்ல வேண்டும், இறந்த பின்பும் நீ பூமியில் வாழவேண்டும்.



# ம.தி.மு.க. முதன்மைச் செயலாளர் பொறுப்பில் இருந்து துரை விலகல்

ம.தி.மு.க. முதன்மைச் செயலாளர் பொறுப்பில் இருந்து விலகுவதாக துரை வைகோ அறிவித்துள்ளார்.

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவின் மகன் துரை வைகோவுக்கு கட்சியின் முதன்மை செயலாளர் பதவி வழங்கப்பட்டதை தொடர்ந்து, கட்சியின் முக்கிய நிர்வாகிகள், மாவட்ட செயலாளர்கள் பலர் அதிருப்தியால் கட்சியில் இருந்து வெளியேறினர்.

இந்நிலையில், துரை வைகோ பொறுப்பேற்ற நாள் முதல் அவரது ஆதரவாளர்கள் மல்லை சத்யாவுக்கு எதிராக செயல்பட்டு வருகின்றனர் எனவும் கட்சி நிகழ்ச்சிகளில் அவரது பெயரை பதாகைகளில் பயன்படுத்தக் கூடாது என கட்டுப்பாடுகள் போட்டுள்ளார் என்றும் கூறப்படுகிறது. துரை வைகோவுக்கும், மல்லை சத்யாவுக்கும் இடையே மோதல் முற்றியுள்ள நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக அவர் தனது சமூகவலைதளப் பக்கத்தில் பகிர்ந்துள்ள நீண்ட அறிக்கையில்,

"அரசியல் குடும்பத்தில் பிறந்திருந்தாலும் தாமரை இலைத் தண்ணீர் போல இருந்தவன் நான். 2018 ஆம் ஆண்டு இயக்கத் தந்தை வைகோ திடீரென உடல் நலம் குன்றி இதய பாதிப்புக்கு உள்ளானார். தலைவர் என்பதை தாண்டி என் தந்தை உடல் நலத்தை பாதுகாக்க அவரை கண்ணை இமை காப்பது போல் பாதுகாக்க முடிவு எடுத்து அவருக்கு கடமையாற்றி வந்தேன்.

கழகத்தின் தலைமைக் கழகச் செயலாளராக, அதன் பின்னர் பொதுக் குழுவில் முதன்மைச் செயலாளராக கட்சியில் பணியாற்றும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. நான் ஒருபோதும் எந்த பொறுப்பையும் தலைமை பதவியையும் விரும்பியதில்லை. மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம் என்ற இந்த மாபெரும் இயக்கத்தில் நான் ஒரு முன்னணி தொண்டனாக இருந்து இயக்கத்திற்கும், தொண்டர்களுக்கும், இயக்கத் தந்தை வைகோவுக்கும் பணியாற்ற வேண்டும், அது என் கடமை என்று மனதில் உறுதி ஏற்றுக் கொண்டேன்.

வைகோ அரசியலுக்கு வந்து இழந்தது தான் அதிகம். அவர் பெற்றது தமிழ்நாட்டின் உரிமைக்கு போராடி வரும் 'வாழ்நாள் போராளி' என்கிற விருது மட்டும்தான்.

மதுவிலக்கு போராட்டத்தில் கலிங்கப்பட்டியில் உண்ணாவிரதம் மேற்கொண்ட எனது பாட்டி மாரியம்மாள் அதனாலயே உடல்நிலை பாதிக்கப்பட்டு உயிர் துறந்தார். அரசியல் பொது வாழ்வில் எங்கள் குடும்பம் ஒரு உயிரையே தந்திருக்கிறது. அதை கூட நாங்கள் தாங்கிக் கொண்டோம்.

தலைவருக்கு அவப்பெயர் ஏற்படும் வகையில் தொடர்ந்து பத்திரிகைகளுக்கும் ஊடகங்களுக்கும் செய்திகளை கொடுத்து கட்சியை சிதைக்கின்ற வேலையை மறைமுகமாக செய்து வருகிறார் ஒருவர்.

நான் தலைமைக் கழகச் செயலாளர் பொறுப்புக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு தான் அதை சகித்துக் கொள்ள முடியாமல் நான்கு ஆண்டுகளாக, இப்படி கட்சிக்கும் தலைமைக்கும் தீராத பெரும் பழியை சுமத்தி சுகம் காணும் ஒருவர் மத்தியில் கட்சியின் 'முதன்மை செயலாளர்' என்று தலைமைக் கழக பொறுப்பில் தொடர்ந்து பணியாற்றிட என் மனம் விரும்பவில்லை எனவே கழகத்தின் முதன்மை செயலாளர் பொறுப்பில் இருந்து என்னை விடுவித்துக் கொள்கிறேன்.

ஏப்ரல் 20 ஆம் திகதி நடைபெறும் நிர்வாக குழு கூட்டத்தில் பங்கேற்பேன். ஆனால் அதன் பிறகு தலைமைக் கழகத்தின் மிக முக்கிய முடிவுகள் மேற்கொள்ளும் கூட்டங்கள் எதிலும் கலந்து கொள்ள மாட்டேன். என்னால் இயக்கத்திற்கோ, இயக்க தந்தைக்கோ எள் முனை அளவு கூட சேதாரம் வந்து விடக்கூடாது என்று தான் இந்த முடிவை எடுத்து இருக்கிறேன்.

அதே நேரத்தில் மறுமலர்ச்சி தி.மு.கவின் முதல் தொண்டனாக இருந்து கட்சிக்காக உழைப்பேன் என்பதை உறுதியோடு தெரிவித்துக் கொள்கிறேன். திருச்சி தொகுதி மக்கள் மகத்தான வெற்றி பெற செய்து தங்கள் பிரதிநிதியாக நாடாளுமன்றத்திற்கு என்னை அனுப்பி வைத்துள்ளார்கள். அந்த மக்களுக்காக ஒரு எம்.பி. என்ற வகையில் கண்ணும் கருத்துமாக கடமையாற்றுவேன். எப்போதும் போல இயக்கத் தொண்டர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் அரணாகவும் சுக துக்கங்களில் பங்கேற்கும் தோழனாகவும் இருப்பேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த ஏழு ஆண்டுகளாக நான் மேற்கொண்ட முயற்சிகளை கழகத்தின் முக்கிய நிர்வாகிகள் தொடர வேண்டும். எந்த சூழ்நிலையிலும் நம் தலைவர் மனம் கலங்கி விடாமல் அவரைப் பாதுகாக்க வேண்டும் என்று இருகரம் கூப்பி கேட்டுக் கொள்கிறேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.



# டில்லியில் நான்கு மாடி கட்டடம் இடிந்து விழுந்ததில் 4 பேர் பலி

தலைநகர் டில்லியின் வடகிழக்கு பகுதியில் இன்று அதிகாலை நான்கு மாடி கட்டடம் இடிந்து விழுந்துள்ளது.

இந்த விபத்தில் சிக்கிய சுமார் 14 பேர் மீட்கப்பட்டுள்ளனர். அதில் நான்கு பேர் உயிரிழந்துள்ளனர் என தகவல் கிடைத்துள்ளது. 10 பேர் இடிபாடுகளில் சிக்கி இருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

டில்லியின் முஸ்தபாபாத் பகுதியில் இந்தச் சம்பவம் அதிகாலை 3 மணி அளவில் நடந்துள்ளது. இதில் மீட்கப்பட்டவர்கள் ஜி.டி.பி. மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவம் குறித்த தகவல் கிடைத்ததும் அந்த இடத்துக்கு தேசிய பேரிடர் மீட்பு படையினர், தீயணைப்பு படையினர் மற்றும் பொலிஸார் விரைந்து சென்று, மீட்பு பணிகளை மேற் கொண்டு வருகின்றனர். கட்டடம் இடிந்து விழுந்ததற்கான காரணம் குறித்த விசாரணை தொடங்கி உள்ளது.

கட்டடம் இடிந்து விழுந்த போது பெரிய அளவில் தூசு ஏற்பட்டுள்ளது. இது அந்த கட்டடத்துக்கு அருகில் இருந்த கட்டடங்களில் உள்ள சி.சி.டி.வி. கேமரா காட்சிகளில் பதிவாகி உள்ளது. கடந்த வாரம் டில்லியில் கட்டடம் மற்றும் சுவர் இடிந்து விழுந்த இரு வேறு சம்பவங்களில் இரண்டு பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. முஸ்தபாபாத் கட்டட இடிபாடுகளில் சுமார் 10 பேர் சிக்கி இருக்கலாம் என அஞ்சப்படுகிறது. அவர்களை மீட்கும் பணி நடைபெற்று வருகிறது.

“இடிந்து விழுந்த கட்டடத்தில் இருந்து 14 பேர் இதுவரை மீட்கப்பட்டுள்ளனர். அவர்களில் 4 பேர் உயிரிழந்தனர். மருத்துவர்கள் அதை உறுதி செய்துள்ளனர். 8 முதல் 10 பேர் வரை இடிபாடுகளில் சிக்கி இருக்கலாம் என கருதுகிறோம். இடிந்து விழுந்த கட்டடம் நான்கு மாடி கட்டடம்” என டில்லி வடகிழக்கு மாவட்ட பொலிஸ் துணை ஆணையர் சந்தீப் லம்பா தெரிவித்தார்.

“எங்களுக்கு அதிகாலை 3 மணி அளவில் கட்டடம் இடிந்து விழுந்தது குறித்த தகவல் கிடைத்தது. உடனடியாக நாங்கள் இங்கு விரைந்து வந்தோம். இந்த நான்கு மாடி கட்டடம் முழுவதுமாக இடிந்து விழுந்துள்ளது. இதன் இடிபாடுகளில் மக்கள் சிக்கி உள்ளனர். தேசிய பேரிடர் மீட்பு படை மற்றும் தீயணைப்பு படையினர் மீட்பு பணிகளில் ஈடுபட்டுள்ளனர்” என தீயணைப்பு துறை அதிகாரி ராஜேந்திர அத்வால் கூறியுள்ளார்.

டில்லியில் நேற்று மாலை நகரின் சில பகுதிகளில் மழை பொழிவு பதிவானது என்பது குறிப்பிடத்தக்கது.






# போரை நிறுத்தவும் பணயக் கைதிகளை விடுவிக்கவும் தயார் என்கிறது ஹமாஸ்

காஸா போரை நிறுத்துவதற்கு தம்மிடமுள்ள அனைத்து பணயக் கைதிகளையும் விடுவிப்பதற்கு தயார் என ஹமாஸ் தெரிவித்துள்ளது.


பணயக் கைதிகளையும் இஸ்ரேல் சிறையில் அடைக்கப்பட்டுள்ள பாலஸ்தீனர்களையும் பரிமாற்றிக் கொள்வதற்கு முழுமையான போர் நிறுத்த ஒப்பந்தம் அவசியம் என ஹமாஸ் வலியுறுத்தியுள்ளது.

இதற்கான கலந்துரையாடல்களை உடனடியாக ஆரம்பிக்க தயாராக இருப்பதாகவும் ஹமாஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலினால் முன்வைக்கப்பட்ட இடைக்கால போர் நிறுத்த முன்மொழிவை ஹமாஸ் நிராகரித்துள்ள நிலையில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

பணயக் கைதிகளை விடுவிப்பதற்கும் போர் நிறுத்தம் தொடர்பான கலந்துரையாடல்களை ஆரம்பிப்பதற்கும் 45 நாள்கள் இடைக்கால போர் நிறுத்தத்திற்கான முன்மொழிவு இஸ்ரேலினால் முன்வைக்கப்பட்டிருந்தது.

இதனை ஹமாஸ் நிராகரித்துள்ள நிலையில் காஸாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 59 பணயக் கைதிகள் விடுவிக்கப்படும் வரை தாக்குதல்கள் தொடரும் என இஸ்ரேல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



# ஆப்கானிஸ்தானில் நிலநடுக்கம் பதிவு

ஆப்கானிஸ்தானில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த நிலநடுக்கம் இன்று சனிக்கிழமை மதியம் ஆப்கானிஸ்தான் - தஜிகிஸ்தான் எல்லை பகுதியில் ஏற்பட்டுள்ளது.

ரிக்டர் அளவுகோலில் இந்த நிலநடுக்கம் 5.8 ஆக பதிவானதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

130 கிலோ மீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக தேசிய நில அதிர்வு ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட நிலநடுக்கம் பாகிஸ்தான் மற்றும் வட இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் உணரப்பட்டது.

இதனையடுத்து பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சம் அடைந்துள்ளனர்.



# ஐரோப்பாவுடன் உறுதியாக வர்த்தக ஒப்பந்தம் எட்டப்படும்

## ட்ரம்ப் தெரிவிப்பு

ஐரோப்பாவுடன் உறுதியாக வர்த்தக ஒப்பந்தம் எட்டப்படும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா - ஐரோப்பா இடையே வர்த்தக ஒப்பந்தத்தை எட்டுவது தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதிக்கும் இத்தாலிய பிரதமருக்குமிடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

டொனால்ட் ட்ரம்பினால் புதிய வரி விதிப்பு தொடர்பான அறிவிப்புகள் வெளியான பின்னர் அவரை ஐரோப்பிய நாடொன்றின் தலைவரொருவர் சந்தித்த முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

கனடா முரசு

சனிக்கிழமை 19/04/2025

## உச்சத்தை தொட்ட சொக்லேட் விலை

கனடாவில் எதிர்வரும் ஈஸ்டர் பண்டிகையில் சொக்லேட் விலைகளில் உயர்வை பதிவு செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனுடன், கோகோ விலை தொடர்ந்து உயர்வாகவே 02



# கனடாவுக்கு கல்வி கற்க வருகின்ற வெளிநாட்டு மாணவர்கள் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்தது

**கனடாவுக்கு கல்வி கற்க வரும் வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைவடைந்து வருகிறது.**

**இதேபோல், கல்வி கற்க அமெரிக்கா மற்றும் பிரித்தானியாவுக்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கையும் குறைவடைந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**இந்த நாடுகளில் வெளிநாட்டு மாணவர்களுக்கு விதிக்கப்படும் பல்வேறு விதமான கட்டுப்பாடுகளே இந்நிலைக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இதேவேளை, கனடாவிற்குள் புதிதாக புலப்பெயர்பவர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த அரசு தனது குடிவரவு விதிகளை கடுமையாக்கி உள்ளது.

அந்தவகையில் கடந்த ஆண்டில் 2.35 மில்லியன் தற்காலிக விசா விண்ணப்பங்களை கனடா நிராகரித்துள்ளது.

நிராகரிக்கப்பட்ட 2.35 மில்லியன் விசாக்களில் 1.95 மில்லியன் விசாக்கள் பயண விசாக்கள் ஆகும்.

கொவிட் பரவலுக்கு பின்னர் அதிகரித்து வரும் தற்காலிக குடியிருப்பாளர்களின் எண்ணிக்கையால் பாதிக்கப்பட்டுள்ள வீடுகள், சுகாதாரம் மற்றும் பொதுச் சேவைகள் மீதான அழுத்தத்தைக் குறைப்பதற்காகவே விசாக்கள் நிராகரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டொராண்டோவில் ஆயுத முனையில் வாகனக் கொள்ளை; பெண் கைது




டொராண்டோவில், ஆயுத முனையில் உரிமையாளரிடம் காரை கொள்ளையடித்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த சம்பவம் கிப்லிங் அவன்யூ மற்றும் நோர்த்குயின் வீதி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மூன்று ஆண்கள் மற்றும் ஒரு பெண், Toyota RAV4 காரை அபகரித்து அந்த இடத்தை விட்டு தப்பியோடியுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாகன உரிமையாளர் காயமடைந்தாரா என்பதற்கான தகவல் இதுவரை வெளியிடப்படவில்லை.

02



# இரு கும்பல்களுக்கிடையிலான மோதலில் சிக்கி பெண் உயிரிழப்பு

கனடாவில் கல்வி கற்கச் சென்ற இந்திய இளம்பெண் ஒருவர், இரண்டு கும்பல்களுக்கிடையிலான மோதலின்போது, குண்டு பாய்ந்து பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்இந்தியரான ஹர்சிம்ரத் (வயது 21) என்னும் இளம்பெண், கனடாவுக்குக் கல்வி கற்கச் சென்றிருந்தார்.

கடந்த வியாழக்கிழமை இரவு 7.30 மணியளவில், பகுதி நேர பணி செய்துவந்த ஹர்சிம்ரத், ஹாமில்டன் பகுதியில் பஸ்ஸுக்காக காத்திருந்திருக்கிறார்.

அப்போது அங்கு வந்த ஒரு கருப்பு நிற Mercedes காரிலிருந்த ஒருவர், மறுபக்கம் நின்றுகொண்டிருந்த ஒரு வெள்ளை நிற sedan காரிலிருந்தவர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டுள்ளார். அப்போது, அவர் சுட்ட ஒரு குண்டு பஸ்ஸுக்காக காத்திருந்த ஹர்சிம்ரத்தின் மார்பில் பாய்ந்துள்ளது.

துப்பாக்கியால் சுட்டவர்கள் தப்பியோடிவிட, மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட ஹர்சிம்ரத், காயங்கள் காரணமாக உயிரிழந்துள்ளார்.

பொலிஸ் இந்த தாக்குதலை நடத்தியவர்களைத் தேடிவரும் நிலையில், ஒரு நல்ல வாழ்க்கைக்காக கனடா சென்ற தங்கள் மகள் அநியாயமாக பலியான அதிர்ச்சியிலும் கவலையிலும் ஆழ்ந்துள்ளது ஹர்சிம்ரத்தின் குடும்பம்.

## உச்சத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளது என்று நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கோகோ பயிர்கள் வளர்த்த முக்கிய நாடுகளில் கடும் வானிலை காரணமாக கோகோ பயிர்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டது.

இதனால், கடந்த சில ஆண்டுகளாகவே கோகோ விலை அதிகரித்து வருகின்றது.

2024 ஆம் ஆண்டு, சர்வதேச சந்தையில் கோகோ விலை டன் ஒன்றுக்கு 12,000 அமெரிக்க டொலரை கடந்தது, தற்போது விலை சுமார் 8,000 டொலர்களாக காணப்படுகின்றது.

கடந்த 2022 இல் 2,000 டொலர்களாக மட்டுமே இருந்ததை நினைவில் வைத்தால், இது பெரும் உயர்வாகவே பார்க்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

சொக்லேட் தயாரிப்பாளர்களுக்கு



விலையை உயர்த்துவது தவிர வழியில்லை என்றும் தரத்தை குறைக்க முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சொக்லேட்டின் உற்பத்திச் செலவு மூன்று மடங்கு அதிகரித்திருக்கும் போது, பழைய விலையை வைத்தே விற்பது சாத்தியமே இல்லை என உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## டொராண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவம் நடந்த சில மணி நேரங்களுக்கு பிறகு திருடப்பட்ட அந்த வாகனம் ஹோக்வில் பகுதியில் உள்ள கட்டுமான தளத்தில் மோதி விபத்தில் சிக்கியது.

விபத்து இடம்பெற்ற இடத்திலிருந்து நான்கு சந்தேகநபர்களும் கால் நடையாக தப்பி ஓடியுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் பெண் சந்தேகநபர், அருகிலேயே Halton பிராந்திய பொலிசாரால் கைது செய்யப்பட்டு, தற்போது டொராண்டோ பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

விசாரணை ஆரம்ப நிலையில் இருப்பதாகவும், மேலும் தகவல் தெரிந்தவர்கள் பொலிஸாரிடம் உடனே தகவல் வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொள்ளை மற்றும் விபத்து சம்பவம் தொடர்பாக பொலிஸார் தீவிர விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர்.



# வாகன விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

கார் ஒன்று மின் கம்பத்தில் மோதி தீப்பிடித்து எரிந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்

எக்லிங்டன் அவன்யூ மற்றும் பிரிம்லி வீதி சந்திப்பில் இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இந்த வாரம் மின் கம்பத்தில் மோதி ஏற்பட்ட இரண்டாவது வாகன விபத்து இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த புதன்கிழமை இரவு, Lake Shore Boulevard பகுதியில் இதேபோன்று ஹைட்ரோ மின் கம்பத்தில் மோதி தீப்பிடித்த மற்றொரு விபத்து நடந்தது குறிப்பிடத்தக்கது.

Eglington பகுதியில் மேற்கே சென்று கொண்டிருந்த BMW சிடான் கார் ஒன்றே இவ்வாறு விபத்தில் சிக்கியுள்ளது.

மற்றொரு வாகனத்தை மோதிய பிறகு, கட்டுப்பாட்டை இழந்த கார், ஹைட்ரோ கம்பியில் மோதியதாகக் கூறப்படுகிறது.

சம்பவத்தில் உயிரிழந்தவரின் ஆள் அடையாள விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.



